[2005 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வி. முரளிதரன்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 287, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு நிதி அமைச்சர்.

287—

துணைக் கருவூலம்

***33761**—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவொற்றியூர் நகரத்தில் துணைக் கருவூலம் ஆரம்பிக்க உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை திருவொற்றியூர் நகரத்தில் துணைக் கருவூல அலுவலகம் அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் நகரம் ஒரு மிக முக்கியமான நகரமாகும். இந்நகரமானது சென்னை மாநகரத்தில் மிக முக்கிய பகுதியில் அமைந்துள்ளது. இந்தத் திருவொற்றியூர் நகரத்தில் பல அரசு அலுவலகங்கள் அதிகமாக இருக்கின்றன. பள்ளிகள், கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. இங்கு பணி செய்கின்றவர்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய பணத்தையும் அல்லது அரசிடமிருந்து பெறவேண்டிய நிதியையும் பெறவேண்டுமென்றால், Treasury அலுவலகம் – துணைக் கருவூலம் இல்லாத காரணத்தினால், ஒவ்வொரு முறையும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருக்கின்ற Pay and Accounts Office–க்குச் செல்லவேண்டியிருக்கின்றது. அங்கு சென்று, திரும்பவும் அங்கு காசோலையைப் பெற்றுக்கொண்டு, திரும்பவும் திருவொற்றியூரில் இருக்கின்ற அரசு அலுவலகத்திற்கு வந்து, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடத்திலே கையெழுத்து பெற்று, மீண்டும் அந்தக்

2005 ஏப்ரல் 4]

காசோலையை மாற்றுவதற்கு Reserve Bank அல்லது அங்குள்ள Beach Railway Station–க்கு எதிரில் இருக்கின்ற State Bank–க்குச் செல்லவேண்டியிருக்கின்றது. ஆகவே, காலமும், நேரமும் வீணடிக்கப்படுகின்றது. அதைப்போல பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் தேர்விற்குக் கட்டணத்தைச் செலுத்தவேண்டுமென்றால், ஒவ்வொரு முறையும் அந்தப் பகுதிக்கு தூரமாகச் செல்ல வேண்டியிருப்பதன் காரணமாக பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, புதியதாக ஒரு துணைக் கருவூலம் ஆரம்பிப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் வேலைப் பளு குறைவாக இருக்கிறது. பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கையும், ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. இதை அங்கு நிறுவுவதற்கு தொடர் செலவு 10 இலட்சம் ரூபாய் ஆகும். ஆரம்பச் செலவு 42 இலட்சம் ரூபாய் ஆகும். இதனால்தான் ஆங்கு இந்த அலுவலகம் அமைக்க வேண்டாம் என ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு முக்கியமான நகரமாக இருப்பதன் காரணமாக, வருவாயை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அதை மறுபரிசீலனை செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வினாவிற்கும் நான் ஏற்கெனவே அளித்த விடைதான் பதிலாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

முற்பகல் 10–50

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டியை வட்டத் தலைமையிடமாக அறிவித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நல்லமுறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வட்டப் பகுதியிலே ஒரு துணைக் கருவூலம் இருக்கவேண்டுமென்று

அரசு விதிமுறை இருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். மேலும் அந்தப் பகுதியிலே பென்ஷன்தாரர்களும், அரசு ஊழியர்களும், இருக்கிறார்கள். அதேபோல பள்ளிகள், பல்வேறுபட்ட நிறுவனங்கள் அங்கே அதிகமாக இருக்கின்றன. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு நான் கேள்வி நேரத்திலே கேட்கிறபோது, 'பாப்பிரெட்டிப்பட்டிக்கு, அரூர் பகுதிக்குச் சென்றுதான் அந்த மக்கள் பயன்பெறவேண்டும். ஆகவே, 28 கி.மீ. தொலைவு இருக்கிற காரணத்தால், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைமையிடத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்கப் பரிசீலிக்கப்படும்' என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு அங்கே இந்த நிதியாண்டிலே துணைக் கருவூலம் அமைக்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைமையிடம், ஏற்கெனவே இருக்கின்ற 23 இடங்களில் கருவூலங்களுடைய அலுவலகங்கள் இல்லை. ஆனாலும் தூரத்தின் அடிப்படையிலே இது ஆயப்படும் என்று ஏற்கெனவே அவையில் ஓர் உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 288, திரு. ந. கணபதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

288—

கோயில் திருப்பணி

***37525—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, இரும்பை கிராமத்தில் உள்ள ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணியை நடத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். விழுப்புரம் மாவட்டம்,